# கிறிஸ்தவ நம்பிக்கைகள்

## தேர்வு விடைக் குறிப்பேடு

shepherds
GLOBAL CLASSROOM

# கிறிஸ்தவ நம்பிக்கைகள்

## தேர்வு விடைக் குறிப்பேடு

shepherds
GLOBAL CLASSROOM

# பாடம் 1
# தேவனுடைய புத்தகம்

(1) பொதுவான வெளிப்பாடு என்றால் என்ன?

பொதுவான வெளிப்பாடு என்பது தேவனுடைய படைப்பைப் பார்த்து நாம் புரிந்து கொள்ளக்கூடியது.

(2) தேவன் எந்த வடிவங்களில் சிறப்பு வெளிப்பாட்டைக் கொடுத்துள்ளார்?

- வேதாகமத்தின் ஏவப்படுதலின் மூலமாக
- கிறிஸ்துவின் மாம்சத்தில் வந்த மனித அவதாரத்திலும்

(3) பொதுவான வெளிப்பாட்டினால் வெளிப்படுத்தப்படாத எந்த சத்தியங்கள் சிறப்பு வெளிப்பாடு மூலம் வெளிப்படுத்தப்படுகின்றன?

- இது தேவனை விவரிக்கிறது.
- இது வீழ்ச்சி மற்றும் பாவத்தை விளக்குகிறது.
- இது நாம் எவ்வாறு தேவனுடன் ஒப்புரவாக முடியும் என்பதைக் காட்டுகிறது.

(4) வேதாகமம் தனக்கென்று எதை உரிமைக் கோருகிறது?

அது தேவனுடைய வார்த்தை என்பதை.

(5) வேதாகமம் மெய்யாகவே தேவனுடைய வார்த்தை என்பதை எந்த ஆறு காரணங்கள் காட்டுகின்றன?

- ஆயிரக்கணக்கான வேதாகம உண்மைகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.
- வேதாகமத்தின் எந்த அறிக்கையும் மறுக்கப்படவில்லை.
- வேதாகமம் தன்னில்தானே முரண்படவில்லை.
- சுவிசேஷம் அதன் விளைவுகளால் நிரூபிக்கப்படுகிறது.
- தேவனுடைய ஆவியானவர் வேதாகமம் மூலம் பேசுகிறார்.
- தேவனோடுள்ள நம் உறவில் வேதாகமம் வழிநடத்துகிறது.

(6) வேதாகமம் ஏன் “உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும் சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது”?

ஏனெனில் அது தேவனால் ஏவப்பட்டதாக இருக்கிறது.

(7) எழுத்தாளர்கள் தவறு செய்யாமல் தடுக்கப்பட்டதை உறுதிப்படுத்தும் ஏவுதலைப் பற்றி வேதாகமம் என்ன விளக்கத்தைக் கொடுக்கிறது?

அவர்கள் பரிசுத்த ஆவியால் கொண்டு செல்லப்பட்டனர் (2 பேதுரு 1:20-21).

(8) எவுதலுக்காக தேவன் பயன்படுத்திய சில பல்வேறு முறைகள் யாவை?

- கேட்கக்கூடிய சத்தம்
- சொப்பனங்கள்
- தரிசனங்கள்
- புரிதல் மற்றும் மேற்பார்வையை வழங்குதல்

(9) வேதாகமம் ஏவப்பட்டது என்பதன் அர்த்தம் என்ன?

அது முற்றிலும் அதாவது பயன்படுத்தப்பட்ட ஒவ்வொரு வார்த்தைகளும் கூட தேவனின் வார்த்தை என்பதாகும்.

(10) வேதாகமம் தவறில்லாதது என்பதன் அர்த்தம் என்ன?

- அது தோல்வியடைய முடியாது.
- அது நம்பக்கூடியது.
- அது நம்மை ஒருபோதும் தவறாக வழிநடத்தாது.

(11) வேதாகமம் பிழையற்றது என்பதன் அர்த்தம் என்ன?

அது ஒவ்வொரு அறிக்கையிலும் துல்லியமாக இருக்கிறது.

# பாடம் 2
# தேவனுடைய பண்புகள்

(1) ஒரு மனிதனின் மிக முக்கியமான பண்பு எது?

தேவன் பற்றிய அவரது கருத்து

(2) சாத்தியமுள்ள மிகக் கடுமையான பிழை எது?

தேவன் எப்படிப்பட்டவர் என்பதில் தவறாக இருப்பது

(3) தேவனைப் பற்றிய வேதாகமத்தின் முதல் பாடம் என்ன?

தேவன் தான் அனைத்தையும் படைத்தவர். (இவ்வாறு அவர் இருக்கும் எல்லாவற்றிலிருந்தும் வேறுபட்டவர்.)

(4) ஒவ்வொரு கூற்றுக்கும் பொருந்தக்கூடிய தேவனுடைய பண்பின் பெயரைக் குறிப்பிடுக:

- தேவன் எப்படி இருக்கிறார் என்பதை நம்மால் விவரிக்க முடியாது: *ஆவியாயிருக்கிறார்*
- தேவன் எப்போதும் இருக்கிறார்: *நித்தியமாணவர்*
- தேவன் ஒரு ஆள்தன்மையற்ற சக்தி அல்ல: *ஆள்தன்மையுள்ளவர்*
- தேவனுடைய இயல்பு எப்போதும் ஒரே மாதிரியாக இருக்கும்: *மாறாதவர்*
- தேவன் தேர்ந்தெடுக்கும் எதையும் அவரால் செய்ய முடியும்: *சர்வ வல்லமையுள்ளவர்*
- தேவன் எல்லாவற்றையும் பார்க்கிறார்: *எல்லா இடங்களிலும் இருக்கிறார்*
- தேவன் தம்முடைய குமாரனை அனுப்பினார், அதனால் நாம் இரக்கம் கொள்ளலாம்: *அன்புள்ளவர்*
- தேவன் தனது இயல்பில் மூன்று நபர்களைக் கொண்டுள்ளார்: *திரியேகமுள்ளவர்*
- தேவனுக்கு முழுமையான தார்மீக பரிபூரணம் உள்ளது: *பரிசுத்தர்*
- தேவனுடைய செயல்கள் எப்போதும் நியாயமானவை மற்றும் நீதியானவை: நீதியுள்ளவர்

# பாடம் 3
# திரித்துவம்

(1) தேவனுடைய இயல்பைப் பிரபஞ்சம் எவ்வாறு விளக்குகிறது?

பிரபஞ்சம் மூன்று அம்சங்களைக் கொண்டுள்ளது - இடம், காலம் மற்றும் பொருள்.

(2) திரித்துவக் கோட்பாட்டிற்கு எந்த மூன்று வேதாகம மூலக்கூறுகள் அஸ்திபாரமாக உள்ளன?

- ஒரேயொரு தேவன் இருக்கிறார்.
- பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியானவர் ஆகிய அனைவரும் வேதத்தில் தேவனாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.
- இந்த மூன்று நபர்களும் ஒவ்வொருவரும் ஒருவரையொருவர் மற்றும் தனித்தனி நபர்களாக உலகத்துடன் தொடர்புபடுத்துகின்றனர்.

(3) திரித்துவத்திற்குள் உள்ள உறவுகளின் அமைப்பு என்ன?

பிதா தலைமையானவர், பின்னர் குமாரன், பின்னர் ஆவியானவர். குமாரன் பிதாவுக்கு நித்தியமாக அடிபணிந்தவராக இருக்கிறார். பரிசுத்த ஆவியானவர் பிதாவிடமிருந்து வருகிறார்.

(4) திரித்துவத்தின் உறவுகளைப் பிரதிபலிக்க வேண்டிய சில மனித உறவுகள் யாவை?

குடும்பம் மற்றும் திருச்சபை.

(5) திரித்துவமாக வழிபடுவது என்றால் என்ன?

திரித்துவத்தின் ஒவ்வொரு நபரும் ஆராதனைக்குத் தகுதியானவர்கள் என்பதை நாம் அங்கீகரிக்கிறோம். நாம் பிதாவிடம், குமாரன் மூலம், ஆவியில் ஜெபிக்கிறோம், ஆனால் திரித்துவத்தின் அனைத்து நபர்களிடமும் ஜெபிக்கிறோம்.

(6) திரித்துவத்தைப் பற்றிய மூன்று பொதுவான தவறான கோட்பாடுகளை பெயர் குறிப்பிடுக.

1. **மாடலிசம்** என்பது தேவன் உண்மையில் வெவ்வேறு பாத்திரங்களை ஏற்ற ஒரு நபர் என்ற கருத்து.
2. **திருமூர்த்தி** என்பது பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூவரும் தனித்தனி நபர்கள் என்கிற கருத்து.
3. **அடிபணிதல்வாதம்** என்பது திரித்துவத்தில் ஒருவர் மற்றவரை விட தாழ்ந்தவர் என்கிற எண்ணம்.

# பாடம் 4
# மனிதக்குலம்

(1) மனிதகுலத்தைப் பற்றிய கிறிஸ்தவ பார்வை மற்றவர்களிடமிருந்து எவ்வாறு வேறுபடுகிறது?

மனிதன் தேவனுடைய சாயலில் இருப்பதால் அவன் முக்கியமானவன் என்பதை ஒரு கிறிஸ்தவர் அறிவார்.

(2) மனிதகுலத்தில் தேவனின் சாயல் உடல் ரீதியானது அல்ல என்பதை நாம் எப்படி அறிவோம்? மூன்று காரணங்களைக் கூறுக.

- தேவன் ஆவியாயிருக்கிறார்.
- தேவனுடைய உருவங்களை மனிதனைப் போல உருவாக்குவது உருவ வழிபாடு எனப்படும்.
- மனிதகுலம் பூமியில் வாழ்வதற்காக சரீரப்பிரகாரமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

(3) மனிதகுலத்தில் தேவனுடைய சாயலின் ஒன்பது கூறுகளை பட்டியலிடுக.

- சிருஷ்டிப்பின் உள்ளுணர்வு
- சிந்திக்கும் திறன்
- தொடர்பு திறன்
- சமூக இயல்பு
- தார்மீக உணர்வு
- சுய சித்தம்
- சாவாமை
- அன்புசெலுத்தும் திறன்
- ஆராதனைச் செய்யும் திறன்

(4) எந்தக் காரணத்திற்காக நாம் தேவனுடைய சாயலில் படைக்கப்பட்டுள்ளோம்?

- தேவனை நேசிப்பதற்காகவும் வணங்குவதற்காகவும்
- தேவனோடு உறவாடுவதற்கும்

(5) தார்மீக உணர்விலிருந்து என்ன திறன் வருகிறது?

சரி மற்றும் தவறு பற்றிய கருத்துக்களை புரிந்து கொள்ளும் திறன்

(6) தேவனைப் பிரியப்படுத்த நமது சுயசித்தத்தைப் பயன்படுத்த நமக்கு ஏன் தேவனின் கிருபை தேவை?

ஏனென்றால், பாவம் நம் சித்தத்தைச் சேதப்படுத்திவிட்டது, கிருபையில்லாமல் நாம் பாவத்தின் அதிகாரத்தின் கீழ் இருக்கிறோம்

# பாடம் 5
# பாவம்

(1) பாவம் என்றால் என்ன என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டியதற்கான நான்கு காரணங்கள் யாவை?

- உலகின் நிலையைப் புரிந்து கொள்ள
- உலகில் தேவனின் முன்னுரிமைகளை புரிந்து கொள்ள
- கிருபை மற்றும் இரட்சிப்பை புரிந்து கொள்ள
- பரிசுத்தத்தை புரிந்து கொள்ள

(2) பாவம் தேவனின் தவறு அல்ல என்பதை நாம் எப்படி அறிவோம்?

தேவன் சகலத்தையும் எந்தவித குறையுமில்லாமல், நிறைவாக செய்தார்.

(3) பின்வருவனவற்றில் ஒவ்வொன்றிற்கும் ஒரு வாக்கியத்தில் வரையறைத் தருக: பரம்பரை சீரழிவு, மனப்பூர்வமாய் செய்த பாவம், தற்செயலான மீறல்கள் மற்றும் பலவீனம்.

*பரம்பரை சீரழிவு* என்பது மனிதனின் தார்மீக இயல்பின் ஏற்பட்டிருக்கும் சிதைவு ஆகும், இது பிறப்பிலிருந்தே அவனை பாவத்தை நோக்கி இட்டுச் செல்கிறது.

*மனப்பூர்வமாய் செய்த பாவம்* என்பது தேவனுடைய அறியப்பட்ட சித்தத்தை தெரிந்தே வேண்டுமென்று மீறுவதாகும்.

*தற்செயலான மீறல்கள்* என்பது தற்செயலாக அல்லது அறியாமையால் தேவனுடைய வார்த்தையை மீறும் செயல்கள்.

*பலவீனம்* என்பது உடல் அல்லது மனதின் வரம்புகள் அல்லது குறைபாடுகள் ஆகும்.

(4) நாம் ஏன் தேவனுடைய சித்தத்தைப் புரிந்துகொண்டு அதைச் சிறப்பாகச் செய்ய வேண்டும்?

- தேவனைப் பிரியப்படுத்தாத எதையும் செய்ய நாம் விரும்பவில்லை.
- தவறான செயல்கள் வேண்டுமென்றே செய்யாமல் இருந்தாலும் அதனால் மோசமான விளைவுகள் ஏற்படும்.
- கிறிஸ்தவர்களாக நாம் நல்ல முன்மாதிரியாக இருக்க வேண்டும்.
- நாம் தேவனுடைய சித்தத்தைத் தவிர்க்க முயற்சித்தால், நாம் வேண்டுமென்றே பாவம் செய்கிறோம்.

(5) வியாதி பாவம் அல்ல என்பதை நாம் எப்படி அறிவோம்?

இயேசுவுக்கு கூட பலவீனம் இருந்தது, ஆனால் அவருக்கு பாவம் இல்லை.

# பாடம் 6
# ஆவிகள்

(1) தேவதூதர்கள் எப்போது சிருஷ்டிக்கப்பட்டார்கள்?

அவர்கள் பூமி சிருஷ்டிக்கப்படுவதற்கு முன்பாகப் சிருஷ்டிக்கப்பட்டார்கள்

(2) தேவதூதர்கள் எவ்வளவு காலம் வாழ்கிறார்கள்?

தேவதூதர்கள் சாவாமையுள்ளவர்கள்.

(3) தேவதூதர்களுக்கு பொதுவாக சரீரங்கள் இல்லை என்பதை நாம் எப்படி அறிவோம்?

தேவதூதர்கள் ஆவிகளாக இருக்கிறார்கள்.

(4) தேவதூதர்களுக்கு ஆள்தன்மை இருக்கிறது என்பதற்கான சில காரணங்கள் யாவை?

- அவர்கள் பேசுகிறார்கள்.
- அவர்கள் ஆராதிக்கிறார்கள்.
- அவர்களுக்கு உணர்ச்சிகள் உண்டு.
- அவர்களுக்கு அறிவுசார் திறன் உள்ளது.

(5) வேதாகமத்தில் தேவதூதர்களைக் குறிக்கும் சில வித்தியாசமான வார்த்தைகள் யாவை?

- கேருபீன்கள்
- சேராபீன்கள்
- பிரதான தேவதூதர்கள்
- ஆவிகள்

(6) விசுவாசிகளுக்கு தேவதூதர்கள் என்ன செய்கிறார்கள்?

அவர்கள் பாதுகாக்கிறார்கள்.

(7) அசுத்த ஆவிகளின் தோற்றம் என்ன?

அவர்கள் பாவத்தில் விழுந்துபோன தேவதூதர்கள்.

(8) விக்கிரகாராதனைக்காரர் உண்மையில் எதை வணங்குகிறார்கள்?

பேய்கள் / அசுத்த ஆவிகள்

(9) சாத்தான் மற்றும் பிற அசுத்த ஆவிகளின் முடிவான விதி என்ன?

# பாடம் 7
# கிறிஸ்து

(1) மேசியாவின் முன்னுரிமை என்ன?

பாவத்திலிருந்து ஜனங்களை விடுவிப்பதே

(2) "இயேசுவே கர்த்தர்" என்று ஆரம்பகால திருச்சபை கூறியதன் பொருள் என்ன?

அவர் தேவன், அனைவருக்கும் கர்த்தர் என்று

(3) இயேசு எப்படி தனிப்பட்ட முறையில் தேவனுடைய குமாரனாக இருக்கிறார்?

பிதாவின் இயல்பை முழுமையாகப் பகிர்ந்துகொள்பவர் அவர் மட்டுமே.

(4) அவதாரம் என்பதன் பொருள் என்ன?

அவர் மாம்சத்தில் வந்த தேவன், அல்லது தேவன் மனிதன் ஆனார் என்பதாகும்.

(5) இயேசு மனிதனாக இருப்பது முக்கியமான மூன்று காரணங்களைச் சொல்லுங்கள்.

- அவர் ஒரு பலியாக சிலுவையில் பாடுபட்டு மரிக்கமுடியும்.
- அவருடைய நீதியான வாழ்க்கை நம்முடைய பாவ வாழ்க்கையின் இடத்தை எடுத்துக்கொள்ள முடியும்.
- அவர் தேவனுக்கு நம்மைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நமது ஆசாரியராக இருக்கமுடியும்.

(6) இயேசு தேவன் என்பதை நாம் அறிய வேண்டும் என்பதற்கான மூன்று காரணங்களைச் சொல்லுங்கள்.

- அவரது சிலுவைப் பலிமரணம் எல்லையற்ற மதிப்புடையது.
- நம்மை இரட்சிக்கும் வல்லமை அவருக்கு உண்டு.
- பிதாவை ஆராதிப்பது போல் அவரையும் ஆராதிக்க வேண்டும்.

(7) ஒரு பலி தேவையான இரண்டு காரணங்கள் என்ன?

தேவன் நம்மை மன்னித்து இன்னும் நீதியாகவும் பரிசுத்தமாகவும் இருக்க ஒரு பலி செய்ய வேண்டியிருந்தது.

(8) ஏன் இயேசு சிலுவையில் மரித்தார்; வேறு ஒரு வழியால் அல்ல?

இயேசு ஒரு மரத்தில் சிலுவையில் அறையப்பட்டதன் மூலம் தேவனுடைய சாபத்தை தன்மீது ஏற்றுக்கொண்டதாக.

(9) இயேசுவின் உடலுடன் உயிர்த்தெழுதலின் முக்கியத்துவத்திற்கான மூன்று காரணங்களைச் சொல்லுங்கள்.

- அது பாவம் மற்றும் மரணத்தின் மீதான அவரது முழுமையான வெற்றியை நிரூபித்தது.
- அது அவர் தான் யாராக இருக்கிறார் என்று கூறிக்கொண்டார் என்பதை நிரூபித்தது.
- அது நாமும் மரித்தோரிலிருந்து எழுப்பப்படுவோம் என்ற உறுதியை நமக்கு அளிக்கிறது.

# பாடம் 8
# இரட்சிப்பு

(1) சிலுவை ஏன் பலருக்கு ஒரு இடறலாக இருக்கிறது?

ஏனென்றால் அவர்கள் மன்னிப்பு தேவைப்படும் பாவிகள் என்கிற அர்த்தத்தைக் கொண்டுள்ளது.

(2) ஒரு பாவியினுடைய நிலையின் நான்கு அம்சங்கள் யாவை?

- அவர் பல பாவச் செயல்களுக்குக் குற்றவாளியாகிறார்.
- அவர் தேவனுடைய சத்துரு.
- அவர் தன் இச்சைகளில் கெட்டுப்போகிறார்.
- அவர் தன் நிலையை மாற்றிக் கொள்ள முடியாதவன் ஆகிறார்.

(3) பரிகாரம் இல்லாமல் மன்னிப்பது ஏன் தேவனை அவமதிக்கிறதாய் இருக்கிறது?

தேவன் அநியாயமானவர், பரிசுத்தமற்றவர் என்று தோன்றும்.

(4) மனந்திரும்புதல் என்றால் என்ன?

- ஒரு பாவி தன்னை குற்றவாளியாகவும், தண்டனைக்கு தகுதியானவராகவும் பார்க்கிறான்.
- அவன் தனது பாவங்களை விட்டுவிட தயாராக இருக்கிறான்.

(5) ஒருவருக்கு இரட்சிப்பின் விசுவாசம் உண்டெனில், அவர் விசுவாசிக்கிறார் என்பதன் அர்த்தம் என்ன?

- அவர் தன்னை நியாயப்படுத்த எதுவும் செய்ய முடியாது
- கிறிஸ்துவின் பலி அவருடைய மன்னிப்புக்கு போதுமானது
- இயேசு பாவத்தையும் மரணத்தையும் வென்று மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார்
- தேவன் விசுவாசத்தினுடைய நிபந்தனையின் பேரில் மட்டுமே அவரை மன்னிப்பார்

(6) எந்த இரு வழிகளில் பலியாக இருக்கத்தக்கதாக இயேசு தனித்துவமாக தகுதி பெற்றார்?

- பாவமில்லாதவராக இருப்பதன் மூலம்.
- தேவனாகவும் மனிதராகவும் இருப்பதன் மூலம்.

(7) தான் இரட்சிக்கப்பட்டதை ஒரு நபர் எப்படி உறுதியாக அறிந்துகொள்ள முடியும்?

- மெய்யாகவே மனந்திரும்பி.
- வேதத்திலுள்ள தேவனுடைய வாக்குத்தத்தை நம்பி.
- ஆவியியானவரின் சாட்சியைப் பெறுவது.

(8) இரட்சிப்பின் சொற்களை சரியான சொற்றொடர்களுடன் பொருத்துக:

| சொல் | **பதில்**, சொற்றொடர் |
|---|---|
| மீட்பு | **அ**, ஒரு விலை கொடுக்கப்பட்டது |
| பரிசுத்தமாக்குதல் | **ஏ**, பரிசுத்தமாக்கப்படுகிறார் |
| பரிகாரம் | **ஊ**, பதிவு குறிப்பு அழிக்கப்படுகிறது |
| விடுதலை | **எ**, மீட்கப்படுகிறார் |
| முத்திரையிடுதல் | **இ**, அடையாளப்படுத்தப்படுகிறது |
| ஒப்புரவாக்குதல் | **ஈ**, தேவனுடன் சமாதானம் |
| கிருபாதாரபலி | **உ**, ஒருவரின் கோபத்தைத் தணிக்க கொடுக்கப்பட்ட ஒன்று |
| புத்திரசுவிகாரம் | **ஐ**, சட்டப்பூர்வ பிள்ளையாக மாறுகிறார் |
| மறுஜென்மம்/புதிய பிறப்பு | **ஒ**, புதிய வாழ்க்கை |
| நீதிமானாக்கப்படுதல் | **ஆ**, நீதியுள்ளவனாக எண்ணப்படுதல் |

# பாடம் 9
# இரட்சிப்பின் பிரச்சினைகள்

(1) 1 யோவானின் முக்கிய கருப்பொருள் என்ன?

இரட்சிப்பின் தனிப்பட்ட உத்தரவாதம்

(2) ஒரு விசுவாசியில் காணப்படுகின்ற எந்தப் பண்பை 1 யோவான் மிகவும் வலியுறுத்துகிறது?

பாவத்தின் மீதான வெற்றி

(3) 1 கொரிந்தியர் 10:13 -லிருந்து எந்த நான்கு காரியங்களை நாம் அறிந்திருக்கிறோம்?

- சோதனை நம் மனிதத்தன்மையின் காரணமாக வருகிறது.
- தேவன் நம் எல்லைகளை அறிந்திருக்கிறார்.
- தேவன் நமக்கு வரும் சோதனைகளை மட்டுப்படுத்துகிறார்.
- வெற்றிக்குத் தேவையானதை தேவன் வழங்குகிறார்.

(4) ஒரு விசுவாசி எவ்வாறு கிறிஸ்துவில் தொடர்ந்து நிலைத்திருக்கிறார்?

கிறிஸ்துவின் கட்டளைகளைக் கைக்கொள்ளுவதன் மூலம்

(5) தொடர்ச்சியான இரட்சிப்புக்கு என்ன அவசியம்?

கிறிஸ்துவுடனான ஒரு தொடர்ச்சியான உறவு

# பாடம் 10
# பரிசுத்த ஆவியானவர்

(1) பரிசுத்த ஆவிக்கு ஆரம்பகால திருச்சபையின் மாறுத்திரமான மூன்று பண்புகளை பட்டியலிடுக.

- அவர்கள் பரிசுத்த ஆவியானவரை அவருடைய தெய்வத்துவத்தில் கனம்பண்ணினார்கள்.
- பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னம், வழிகாட்டுதல் மற்றும் செயல்பாடு குறித்து அவர்கள் அறிந்திருந்தனர்.
- பரிசுத்த ஆவியானவருக்குப் பதிலளிப்பதில் தங்களுடைய சார்பு மற்றும் பொறுப்பை அவர்கள் உணர்ந்திருந்தார்கள்.

(2) பரிசுத்த ஆவியானவர் ஒரு நபர் என்பதை ஆள்தன்மையின் எந்த பண்புகள் காட்டுகின்றன?

அவருக்கு ஒரு மனம், சித்தம் மற்றும் உணர்ச்சிகள் உள்ளன என்பவை.

(3) ஆவியானவரின் சில நடவடிக்கைகள் யாவை? கொடுக்கப்பட்ட 13ல் 9ஐப் பட்டியலிடுக.

ஏதேனும் ஒன்பது:

- அவர் பாவத்தைக் கண்டித்து உணர்த்துகிறார்.
- பாவத்தில் மரித்தவனுக்கு ஜீவனைக் கொடுத்து, மீண்டும் பிறக்கும்படிச் செய்கிறார்.
- அவர் விசுவாசிக்கு இரட்சிக்கப்பட்டதாக தனிப்பட்ட உறுதியளிக்கிறார்.
- அவர் ஒவ்வொரு விசுவாசியிலும் வாழ்கிறார்.
- அவர் தேவனுடைய சத்தியத்தைப் புரிந்துகொள்ளும்படி உதவிச் செய்கிறார்.
- அவர் ஜனங்களை சிறப்பு ஊழியத்திற்கு அழைக்கிறார் மற்றும் ஊழியத்தில் முடிவுகளை எடுக்க வழிநடத்துகிறார்.
- அவர் விசுவாசியை பரிசுத்தப்படுத்துகிறார், அவரை பரிசுத்தமாக்குவதற்காக அவருடைய இருதயத்தை சுத்திகரிக்கிறார்.
- பாவத்தின் மீது வெற்றி பெற்று வாழ்வதற்கு அவர் பெலனை அளிக்கிறார்.
- விசுவாசியின் வாழ்க்கையில் அவர் ஆவியின் கனியைக் கொடுக்கிறார்.

- அவர் ஊழியத்திற்காக ஆவியின் வரங்களைக் கொடுக்கிறார்.
- அவர் ஊழியத்திற்காக விசேஷித்த அதிகாரத்துடன் அபிஷேகம் செய்கிறார்.
- தேவனுடைய சித்தத்தின்படி ஜெபிக்க அவர் விசுவாசிக்கு உதவுகிறார்.
- அவர் திருச்சபையின் ஒற்றுமையையும் ஐக்கியத்தையும் உருவாக்குகிறார்.

(4) நம் வாழ்வில் பரிசுத்த ஆவியானவருடைய கிரியைக்கு அவர் எதற்கு அதிக முன்னுரிமை கொடுக்கிறார்?

> பாவத்தின் மீது நமக்கு வெற்றியைக் கொடுப்பதும், நம் இருதயங்களைச் சுத்திகரிப்பதும்.

# பாடம் 11
# கிறிஸ்தவப் பரிசுத்தம்

(1) ஆராதனையின் முதன்மைக் கருப்பொருள் என்ன?

தேவனின் பரிசுத்தம்

(2) பரிசுத்தம் ஏன் ஆராதனையுடன் இணைக்கப்பட்டுள்ளது?

நாம் தேவனை நேசிப்பதாலும், அவரைப் பிரியப்படுத்த விரும்புவதாலும்.

(3) கிறிஸ்தவ பரிசுத்தம் எப்போது தொடங்குகிறது?

ஒரு நபர் இரட்சிக்கப்படும் போது

(4) வெளிச்சத்தில் நடப்பது என்றால் என்ன?

தேவனுடைய சத்தியத்தைப் பற்றி நாம் அதிகம் தெரிந்துகொள்ளும்போது தொடர்ந்து அவருக்குக் கீழ்ப்படிவதாகும்

(5) தெசலோனிக்க திருச்சபை விசுவாசிகளுக்காக பவுல் என்னத்தை ஜெபித்தார்?

அவர்களை முழுமையாக பரிசுத்தமாகும்படி அவர் ஜெபித்தார், அதனால் அவர்கள் கிறிஸ்துவின் வருகையில் பரிசுத்தமாக காணப்படுவார்கள்.

(6) பெந்தெகொஸ்தே நாளில் நடந்த மிக முக்கியமான காரியம் என்ன?

ஆவியானவர் அவர்களுடைய இருதயங்களைச் சுத்தமாக்கியதுதான்.

(7) பரம்பரை சீரழிவு என்றால் என்ன?

என்பது மனிதனின் தார்மீக இயல்பின் சிதைவு ஆகும், அது பிறப்பிலிருந்தே அவனை பாவத்தின் பக்கம் இட்டுச் செல்லுகிறது

(8) முழு பரிசுத்தமாக்கப்படுதல் என்றால் என்ன?

முழுப் பரிசுத்தமாகுதல் என்பது பரம்பரைச் சீரழிவைச் சுத்தப்படுத்துவதாகும். இது மனமாற்றத்திற்குப் பிறகு ஒரு கட்டத்தில் விசுவாசியில் பரிசுத்த ஆவியால் நிறைவேற்றப்படுகிறது.

# பாடம் 12
# திருச்சபை

(1) திருச்சபையின் யுகம் எப்போது தொடங்கியது?

பெந்தெகொஸ்தே நாளில்

(2) திருச்சபையை ஏன் "அப்போஸ்த்தலிக்க" திருச்சபை என்று அழைக்கலாம்?

ஏனென்றால் அப்போஸ்தலர்களின் போதனைகள் திருச்சபையின் அடிப்படைக் உபதேசங்கள்.

(3) திருச்சபைத் தோற்றத்தின் நான்கு அம்சங்கள் யாவை?

- இயேசுவின் ஊழியம்
- கிறிஸ்துவால் வழங்கப்பட்ட இரட்சிப்பு
- பெந்தெகொஸ்தே நாளில் நடந்த நிகழ்வு
- அப்போஸ்தலருடைய உபதேசங்களின் வளர்ச்சி

(4) உலகளாவிய திருச்சபையின் குறுகிய வரையறை என்ன?

அது எல்லா காலங்களிலும் எல்லா இடங்களிலும் உள்ள அனைத்து கிறிஸ்தவர்களையும் உள்ளடக்கிய ஒரு நிறுவனம் ஆகும்

(5) உள்ளூர் திருச்சபையின் குறுகிய வரையறை என்ன?

அது திருச்சபையின் அனைத்து நோக்கங்களையும் நிறைவேற்ற ஒரு இடத்தில் உள்ள கிறிஸ்தவர்களின் குழுவாகும்

(6) "கத்தோலிக்க திருச்சபை" என்ற வார்த்தையின் அர்த்தம் என்ன?

அது அனைத்து உண்மையான கிறிஸ்தவர்களையும் உள்ளடக்கிய உலகளாவிய திருச்சபையைக் குறிக்கிறது.

(7) திருச்சபையின் உலகளாவிய ஒற்றுமைக்கு அடிப்படையான இரண்டு காரியங்கள் யாவை?

- அப்போஸ்தலருடைய உபதேசங்கள்
- கிறிஸ்துவுடன் மறுரூபமாகும் உறவு

(8) எழுதப்பட்ட உபதேச அறிக்கையின் நோக்கம் என்ன?

விசுவாசிகளின் குழு ஒன்று சேர்ந்து செயல்படுவதற்குத் தேவையான உபதேசங்களைக் காட்டுவதாகும்.

(9) உள்ளூர் திருச்சபையின் ஆறு நோக்கங்களைப் பட்டியலிடுக.

ஏதேனும் ஆறு:

- சுவிசேஷம் அறிவித்தல்
- ஒரு சபையாக கூடிவந்து ஆராதித்தல்
- உபதேசத்தை பராமரித்தல்
- போதகர்களுக்கு பணஉதவி செய்தல்
- மிஷனரிகளை அனுப்புதல் மற்றும் ஆதரித்தல்
- தேவைப்படும் சபை உறுப்பினர்களுக்கு உதவுதல்
- பாவத்தில் விழும் சபை உறுப்பினர்களை ஒழுங்குபடுத்துதல்
- ஞானஸ்நானம் மற்றும் கர்த்தருடைய பந்தியை ஆசரித்தல்
- விசுவாசிகளை ஆவிக்குரிய முதிர்ச்சியடையச் செய்தல்

# பாடம் 13

# நித்திய விதி

(1) பரலோகத்தின் முதன்மை செயல்பாடு என்ன?

ஆராதனை

(2) பரலோகத்தில் இல்லாத சில விஷயங்கள் யாவை?

பாவத்தின் அனைத்து விளைவுகள், நோய், முதுமை மற்றும் மரணம்

(3) யார் பரலோகம் செல்வார்கள்?

விசுவாசிகள் (பாவத்திலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவில் விசுவாசம் வைத்தவர்கள், ஜீவபுஸ்தகத்தில் பெயர்கள் உள்ளவர்கள்)

(4) விசுவாசிகள் எப்போது பரலோகம் செல்வார்கள்?

மரணத்தின் போது அல்லது இயேசு திரும்பி வரும்போது

(5) நரகத்தைப் பற்றி வேதாகமம் எந்த மூன்று விஷயங்களைச் சொல்கிறது?

- இது நித்தியமானது.
- இது மீள முடியாதது.
- இது வேதனையுள்ளது.

(6) ஒருவன் தனது கை அவனுக்கு இடறலுண்டாக்கினால், அதைத் தறித்து எறிந்து போட வேண்டும் என்று இயேசு சொன்னதன் அர்த்தம் என்ன?

பாவம் மற்றும் நரகத்திற்கு நம்மை வழிநடத்தும் எந்தவொரு செயலையும் நிறுத்த வேண்டும்.

(7) நரகம் ஏன் நித்தியமானது?

ஏனெனில்...

- பாவம் என்பது எல்லையற்ற தேவனுக்கு எதிரான குற்றமாகும்.
- பாவிகள் தேவனுக்கு தாங்கள் செய்ய வேண்டிய நித்திய சேவையை மறுக்கின்றனர்.
- நாம் தேவனிடமிருந்து பிரிந்திருப்பதைத் தேர்ந்தெடுத்தால் வேறு எங்கும் செல்ல முடியாத நித்திய ஜீவராசிகள் நாம்.

# பாடம் 14
# கடைசிக்கால சம்பவங்கள்

(1) வேதாகமத் தீர்க்கதரிசனத்தில் கொடுக்கப்பட்டுள்ள கடைசிக்கால சம்பவங்கள் பற்றிய தேவையான நான்கு சத்தியங்கள் யாவை?

- இயேசுவின் சரீரத் திரும்பிவருதல்
- சகல ஜனங்களின் சரீர உயிர்த்தெழுதல்
- நியாயத்தீர்ப்பு
- தேவனின் நித்திய ராஜ்யம்

(2) இயேசு மீண்டும் திரும்பி வரும்போது கிறிஸ்தவர்களுக்கு என்ன சம்பவிக்கும்?

- கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் கிறிஸ்துவுடன் ஆட்சி செய்ய உயிர்த்தெழுப்பப்படுவார்கள்.
- அவர்களும் உயிரோடுள்ள விசுவாசிகளும் கர்த்தரைச் சந்திக்க எழுவார்கள்.

(3) இயேசுவின் வருகைக்காக நாம் எவ்வாறு காத்திருக்க வேண்டும்?

பின்வரும் காரியங்களால் நாம் அவர் வருகைக்காக காத்திருக்கிறோம்:

- நித்திய முன்னுரிமைகளை வைத்திருத்தல்
- பரிசுத்தமாக வாழ்தல்
- ஜெபத்தால் ஆவிக்குரிய ரீதியில் நம்மைக் காத்துக்கொள்ளுதல்

(4) உயிர்த்தெழுதல் உபதேசம் ஏன் அவசியம்?

ஏனென்றால் அது கீழ்காணும் பொருள்படுகிறது:

- இயேசு மரித்தோரிலிருந்து எழுந்தார்
- சகல ஜனங்களும் எழுப்பப்படுவார்கள்
- சரீரத்துக்கு நித்திய மதிப்பு உண்டு
- சுவிசேஷம் உண்மை

(5) நியாயத்தீர்ப்பைக் குறித்து நாம் தெரிந்துகொள்வது ஏன் முக்கியம்?

பின்வருபனவற்றை புரிந்துகொள்வதற்கு:

- பாவத்தின் முக்கியத்துவம்
- தேவனுக்குள்ள நம் பொறுப்பு
- நமது தேர்வுகளின் முக்கியத்துவம்
- சகல பாவங்களுக்குமுள்ள முடிவு

# பாடம் 15
# பண்டைய சமயக் கோட்பாடுகள்

(1) சமயக் கோட்பாடு என்றால் என்ன?

ஒரு சமயக் கோட்பாடு என்பது அத்தியாவசிய கிறிஸ்தவ நம்பிக்கைகளின் சுருக்கம்

(2) ஆரம்பகால கிறிஸ்தவர்களுக்கு இயேசுவைப் பற்றிய எந்த இரண்டு கூற்றுகள் தேவையாயிருந்தன?

- இயேசு கர்த்தராயிருக்கிறார்
- கர்த்தராகிய இயேசு கிறிஸ்து

(3) வேதாகமத்தில் பல கூற்றுக்களை முன்வைக்கும் முதல் சமயக் கோட்பாட்டிற்கான குறிப்பு என்ன?

1 தீமோத்தேயு 3:16

(4) அப்போஸ்தலர்களுடைய கோட்பாட்டின் நோக்கம் என்ன?

அப்போஸ்தலர்களின் உபதேசங்களை வெளிப்படுத்த.

(5) நைசீன் கோட்பாட்டின் நோக்கம் என்ன?

கிறிஸ்துவின் தெய்வத்துவம் மற்றும் பரிசுத்த ஆவியானவரின் உபதேசங்களைப் பாதுகாப்பதாகும்.

(6) கால்செதோனிய கோட்பாட்டின் நோக்கம் என்ன?

கிறிஸ்துவின் மானுட அவதாரம் பற்றிய உபதேசங்களைப் பாதுகாப்பதே.

கிறிஸ்துவை மையமாக. பயிற்சி. எங்கும்.

shepherds GLOBAL CLASSROOM

SHEPHERDSGLOBAL.ORG